www.padippakam.com

# தேடல்



வசந்தத்தின் இடிமுழக்கம்- 5
செப்தம்பர், 2001

நன்கொடை: ரூ. 10 மட்டும்

படிப்பகம்

www.padippakam.com

## மார்க்கியம் பயில்வோம்

கட்சி இலக்கியம் படியுங்கள்
கடந்த காலத்திலிருந்து கற்றறியுங்கள்
பழமையின்றிப் புதுமையில்லை
பழயதை இறுகப் பற்றிக்கொள்வது
முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை
அறிவு நெறி ஏற்பதும்
அருவருப்புகளைத் தவிர்ப்பதும்
மேல் நோக்கிய வளர்ச்சிநிலை
பல்லாயிரத்தாண்டுகால மனித
உழைப்பின் விளைச்சல்களே
நல்லொழுக்க நாகரிகமும் பண்பாடும்.
மாந்த நேயம் போற்றும்
மார்க்கியம் பயிலுவோம்–அவற்றை
வாழ்வியலாய்க் கொள்ளுவோம்.

## வேண்டுவது

ஒவ்வொரு வரியையும்
திறனாயுங்கள்
புரிதல்கள் ஆழப்படவும்
பிழைகள் களையப்படவும்
எண்ணத்தை உரமாக்கி
இலக்கியம் படையுங்கள்.

பண்பாட்டுப் புரட்சி ஒன்றிற்காய்ப்
புறப்பட்டோரின்
தென்கிழக்காசிய வெளியீடு.

மாந்த விடுதலைக்கும், ஏற்றத்தாழ்வு –
சுரண்டலற்ற குமுகக் கட்டமைப்புக்கும்
மார்க்கியமே நெறிமுறை.

படிப்பகம்

www.padippakam.com

தனிச்சுற்றுக்கு மட்டும்

# தேடல்

ஆசிரியர்:
**விளாடிமிர்**

தென்கிழக்காசிய வெளியீடு

**வசந்தத்தின்**
**இடிமுழக்கம்- 5**
**செப்டம்பர், 2001**

## மதிப்பீடு, புரிதல்,
# வளர்ச்சி

இஃது அச்சில் வரும் மூன்றாம் இதழ். அறுபதைக் கடந்த இளையோரின் உழைப்பின்றி இது சாத்தியப்பட்டிருக்காது. நன்றி சொல்வது மட்டும் போதுமானதல்ல என்பதை நாம் அறிவோம்......!

மார்க்சியத்தைக் கற்றறிவதற்கு முன்னரே, இருக்கின்ற அமைப்பின் அவலத்தை நம்மைப் போன்றோர் அறிந்துகொள்ள உதவியது தோழர் பெரியார்தாசனின் பேச்சு. போகிறபோக்கில் இழிவுகளைச் சுட்டிவிட்டுப்போய் விடும் தன்னார்வலர் அல்லரவர். சிக்கல்களை அடையாளம்காட்டி தீர்வுக்கான வழிகளையும் சொல்லிப்போகும் தகைமையினைக் கொண்டவர் அவர் (ஈழச் சிக்கலைத் தவிர).

மார்க்சின் சீடர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள்கூடச் செய்யாத பணியை முன்னெடுப்பதால்தான் பேராசிரியரை வரவேற்பதும் வாழ்த்துவதும். அதே சமயத்தில் அவரிடம் குறைகளாகக் காண்பவற்றை விமர்சிக்க நாம் என்றும் தயங்கியதில்லை.

மூன்பொரு தடவை தமிழ் நாட்டிலிருந்து இங்கு வந்த சிறுகதையாளர் ஒருவர் எழுதுவதற்கு

படிப்பகம்

www.padippakam.com



இங்கே களம் இல்லை என்று பத்திரிகைக்குப் பேட்டி தந்தார்.

பொதுப்பயணக் கட்டணங்கள் உயர்ந்திருக்கின்றன. ‘சம்பள உயர்வை எதிர்பார்க்காதீர்கள்; அதை சந்தைதான் முடிவுசெய்யும்’ என்று சொல்கின்ற அமைச்சர்கள் அடிப்படைத் தேவைகள், பொதுப்பயணக் கட்டணங்களின் உயர்வோடு விலைவாசி உயர்வையும் தடுக்க எத்தகைய முயற்சியும் மேற்கொள்வதில்லை.

கேளிக்கை என்பதின் பேரால் விபச்சாரம். நள்ளிரவு நேரத்துக்குப் பிறகு இளைஞன் ஒருவன் தனியே சென்ற நம்மை அழைத்து, ‘என்னால் உங்களுக்கு எத்தகைய சேவையை வழங்க முடியும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?’ எனக் கேட்கின்றான்.

‘குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காகத்தான் இரவு விடுதியிலும், உடம்பு பிடி நிலையத்திலும் பணிபுரிகிறேன்’ என்று சொல்கின்றார் பருவ வயதுப் பெண்.

வறுமையினால்தான் கல்வியைத் தொடர இயலவில்லை என்று சொல்கின்றார்கள் இளைஞர்கள். இவைபோல் இன்னும் எத்தனையோ. இவையெல்லாம் பேசப்பட, எழுதப்பட வேண்டியவை இல்லையா? இவற்றை அடிப்படையாக்கி கதைகளை, கவிதைகளை, உரைவீச்சுகளை எழுதி விழிப்பூட்டக்கூடாதா?

அவ்வப்போது கூடிப்பேசுவதை எழுத்தாக்குங்கள். தலைசிறந்த கட்டுரைகள் உருவாக வழிவகுக்கும் என்று நள்ளிரவுத் தொலைபேசி உரையாடலின் போது நண்பர் ஒருவரிடம் கூறினேன். தொகுப்பதாகவும் அவ்வாறு செய்வதைக் களத்திற்கு (வேறு நாட்டிற்கு) அனுப்பி வைத்துவிடுவதாகவும் சொன்னார்.

சிரார்த்தம் கொடுத்ததின் எச்சமோ என்று கேட்கத்தோன்றியது. இங்கு ஒன்றும் செய்ய முடியாது என்று தொடர்ந்தார். கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி, சிக்கல்களை வெளிப்படுத்த நண்பர்கள் முன்வருவதில்லை என்று முன்பு ஒருமுறை குற்றம் சுமத்தியவரும் இதே ஆசாமிதான். பரிணாம வளர்ச்சியாய் இருக்குமோ!

தோழர்களின் படங்களைத் தவிர, அவர்களைப் பற்றிய செய்தி ஒன்றுமில்லை என்பதெல்லாம் என்ன? நாம் உள்வாங்கிக்கொண்ட மார்க்சியத்தின் வெளிப்பாடு அச்சித்தாந்தத்தின் பார்வையில் விமர்சனங்களாய் உரைவீச்சு, கட்டுரை என்று வெவ்வேறு வடிவங்களில் படைக்கப்படுகின்றது.

தோழர்களின் தொகுப்பு, தேர்வு நூல்களில் படித்தறிய வேண்டியதை இச்சில பக்க வெளியீட்டில் எதிர்பார்ப்பது என்னே!

படிப்பகம்

www.padippakam.com



இதழ் பற்றி இளைஞர்கள் சிலரும் பேசினார்கள். தமிழில் சொல்லப்படாத பலவற்றை எழுத வேண்டுமென்ற, நம் கருத்தை ஒத்ததாகவே அவ்விளைஞர்களின் எதிர்பார்ப்பு அமைந்திருப்பதை அறிந்துகொள்ள இயன்றது. அதற்கு கியூபா, இந்தோனேசியா போன்ற செய்திகள் ஆதாரமாகின.

★

தோழர் பொழிலன் மணவாழ்க்கை மேற்கொண்டதாக அறிகின்றோம். குடும்ப வாழ்க்கை புரட்சிக்காரனுடைய ஆற்றலைக் குறைத்துவிடும் என்பான் கார்க்கி. அக்கருத்தைப் பொய்பிக்கக்கூடியவர்தான் பொழில் போன்றவர்கள் என்பதனை நாம் அறிவோம். அவரின் இல்வாழ்க்கை ஈடுபாட்டிற்கு அரசியல் காரணங்களும் இருக்கலாம். நம் போன்றோரின் நம்பிக்கையைக் கானல் நீராக்கி விடாதது மட்டுமல்ல, இருவருமாய் தமிழ்நில விடுதலைக்கு மேலும் கூடுதலான பங்களிப்பை நல்குவார்கள், வினைப்பாடாற்றுவார்கள் என்றும் எதிர்பார்க்கின்றோம்.

நமது நண்பர் ஒருவரும் திருமணம் செய்துகொண்டுள்ளார். இல்லறத்துணையோடு, நிலவும் அமைப்பின் அவலங்களை அறிவதில் கவனங் குவிக்க வேண்டுமென்று விழைகின்றோம்.

★

தோழர் இசுடாலின் மீது சொல்லப்படும் குற்றச்சாட்டுகளுக்கு புதிய கலாச்சாரம், புதிய சனநாயகம் போன்ற இதழ்களில்தான் வழமையாக மறுப்பும் விளக்கமும் வெளியிடப்படுகின்றன. சிவப்புச் சித்தாந்தத்தின் நேரடி வாரிசுகள் தாங்கள்தான் என்று உரிமை பாராட்டும் பத்திரிகைகள் ஏதேனும் இத்தகு செயல்களில் ஈடுபாடு காட்டுவது உண்டா? இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம்!

பிரான்சு நாட்டிலிருந்து வெளிவரும் 'சமர்'இன் ஆசிரியர் மகத்தான புரட்சியாளனை பலபத்து பக்கங்களில் பதிவுசெய்திருந்தார்.

தமிழ்நாட்டில் 'நந்தன் வழி'யிலும் கட்டுரை ஒன்று வெளிவந்தது. தவிரவும் அவ்வப்போது "தத்துவம் பயிலுவோம்" போல் பிறவும் வெளியிடப்படுகின்றது. இளவேனிலின் கைவண்ணமது. அவர் அங்கு இருக்கும்வரை தொடரும் என எதிர்பார்க்கலாம்.

நம் தோழர்கள் பலரும் சந்துமுனை சிந்துபாடிகளாக இருப்பதை விடுத்து, எழுதத் துவங்க வேண்டும். அதற்கான தேவை மிகுதியாய் உளது.

படிப்பகம்

www.padippakam.com



'மார்க்சின் தத்துவத்தை நாங்கள் முற்றும் முழுமவான ஒன்றாய்க் கருதவில்லை. மாறாக அது சோசலிச்டுகளுக்குரிய விஞ்ஞானத்தின் அடிக்கல்லை மட்டுமே அமைத்துக்கொடுத்திருக்கிறது; சோசலிச்டுகள் வாழ்க்கையுடன் சேர்ந்து நடைபோட விரும்பினால் இந்த அறிவியலை எல்லாத் திசைகளிலும் வளர்த்துச் செல்வது அவசியம்' என்று மாபெரும் இலெனின் எழுதினார்.

விடுதலைப் பாவலன் மாவோவின் பங்களிப்போடு முற்றுப் பெற்று விடுவதில்லை மார்க்சியத்தின் வளர்ச்சி. அது மேன்மேலும் வளர்த்தெடுக்கப்பட வேண்டியது.

நமது முனைப்புகள் பங்களிப்பாய் அமையுமாயின் அவற்றிலிருந்து இன்றைய பாட்டாளி வர்க்கம் பல்வேறு புதிய போராட்ட வழிகளைப் பெற்றுக்கொள்ளும்.

களத்தில் நிற்கின்றோம். எழுதிக் குவியுங்கள்.

---

## வழிகாட்டுநர் இரசாக்

நாற்பதுகளில் சொகூர் பாருவில் பிறந்தவர் தோழர் இரசாக். இவர் தமது தொடக்கக் கல்வியை ஆயர் மோலேக் மலாய்ப் பள்ளியிலும், இடைநிலைக் கல்வியை சொகூர் பாருவின் ஆங்கிலக் கல்லூரியிலும் பெற்றார்.

முற்போக்கு எண்ணம் கொண்ட சமயவாதியான அரிஃபின் (Ariffin) அவர்கள் கிழக்கு மேற்கிலிருந்து வெளிவரும் நூல்களை விரும்பிப் படிப்பவர். சாவா இன வழித்தோன்றலான அரிஃபின் எலியாஸ்(Elias) மாநிலத் தலைநகரத்தின் முதல் மலாய்ப் பொறிஞருமாவார். அரசியலரான தாத்தாவால் வளர்க்கப்பட்டவர் தோழர் இரசாக்.

திரு அரிஃபின் அரசுப் பணியிலிருந்து ஓய்வுபெற்றதும் அரசியலில் முழுமையாக ஈடுபட்டார். அதனால் அவர் வீட்டில் எப்பொழுதும் அரசியல் தொடர்பான விவாதங்களும் கருத்துப் பரிமாற்றங்களும் நடைபெறுவதுண்டு. இத்தகைய சூழலில் வளரும் பிள்ளைகளின் சிந்தனைப் போக்கு எப்படியிருக்கும்!

''நான் சிறுவயது மாணவனாக இருந்தபோதே அரசியலைப் பெரும் ஆர்வத்துடன் பின்பற்றத்தொடங்

படிப்பகம்

www.padippakam.com



கினேன். அதன்விளைவாய் Sukarno, Mohammed Hatta, Jamal Abdul Nasser, Nkrumah, Md. Ali Jinnah, Nehru, Gandhi போன்றோரை அறிந்ததோடு, பொத்தகங்கள், செய்தித் தாள்கள், வானொலிவழியும் ஆசியா மட்டுமின்றி, ஆப்ரிக்காவிலும் ஏற்பட்ட எழுச்சிகளையும் அரசியல் மாற்றங்களையும் உள்வாங்கிக்கொண்டேன். **Dr. Burhanuddin** அவர்களைத் தாத்தாவின் வீட்டில் சந்தித்ததோடு Ahmad Boestamam, Onn Jaffar ஆகியோரின் அரசியல்போராட்டங்களின் பார்வையாளனாகவும் மாறினேன்,'' என்று பகிர்ந்துகொண்டார் தோழர்.

கல்லூரிக் கல்வி முடிந்து, மாவட்டக் குமுக நலன் அலுவலராக ஓராண்டு பணியாற்றினார். 1963இல் சிங்கப்பூர் பல்கலைக்கழகத்தில் சட்டம் பயிலத் துவங்கினார்.

தாம் பல்கலையில் பயின்ற வேளை அரசியல் தொடர்பிலான சிந்தனைகளும், சொந்த நிலைப்பாடும் கொண்டிருந்ததோடு, மாணவர் குழாமும் மக்களும் எதிர்நோக்கிய பல்வேறு சிக்கலுக்கான தீர்வுக்கு திடமான உறுதி கொண்டிருந்ததாயும், அத்தகு நிலைக்கு தாம் வளர்ந்த சூழல் வழி வகுத்தது என்றும் கூறுவார்.

''மாணவர் இயக்கத்தில் தீவிர பங்காற்றிக்கொண்டிருந்த காலகட்டம். பல்கலைக் கழகத்தின் மாணவர் அமைப்பின் பொறுப்பாளனாகவும், பல்கலையின் சோசலிச கிளப்பின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட நேரமது. அப்போது லீ குவான் இயூ தலைமையில் தீவு அரசியற் புயலில் சிக்குண்டிருந்தது. பெரும் எண்ணிக்கையிலான மாணவர்கள் வெளிப்படையாய் அரசியல் போராட்டத்தில் பங்கேற்றனர்.

''மாணவர்களின் சுதந்திரத்தை ஒடுக்கியதின் விளைவு, லீயின் தலைமை பெரும்பான்மை மாணாக்கரின் எதிர்ப்புக்குள்ளானது. ஆகவே மாணவ இயக்கங்களுக்கு தலைமை தாங்கிய நாங்கள் லீயின் தலைமையிலமைந்த அரசிற்கு அறைகூவல் விடுத்து எதிர்த்தோம். மாணவர்களிடமிருந்து மட்டுமின்றி, மக்களிடமிருந்தும் பெருகிய ஆதரவைக் கண்டு அச்சமுற்றது மக்கள் செயல் கட்சி அரசு. விளைவு பெருந்தொகையிலான மாணவர் இயக்க முன்னோடிகளைச் சிறையிலிட்டது. வெளிநாட்டு மாணவர்களைத் தீவைவிட்டு வெளியேற்றியது. லீயின் இரும்புப்பிடி அரசியலால் பாதிக்கப்பட்டவர்களில் நானும் ஒருவன்'' என்று விளக்கப்படுத்தினார் நேருரையொன்றில்.

இறுதியாண்டு, வெளியேற்றத்திற்குப்பின் கட்டுப்படுத்தப்பட்ட இசைவின் பேரில் தேர்வெழுதி 1967ஆம் ஆண்டு சட்டத்துறையில்

படிப்பகம்

www.padippakam.com



பட்டம் பெற்றார். சிங்கப்பூரில் நுழைய விதிக்கப்பட்ட தடை இன்றும் தொடர்கின்றது.

சொகூர் மாநில அரசின் கல்வி உதவித் தொகை பெற்றவர் என்பதால் பட்டம் பெற்றதும், மாநிலத்தின் நில, மற்றும் கனிவளத்துறையின் துணை இயக்குநராகப் பணியாற்றினார். ஓராண்டுகூட முழுமை பெறாத நிலையில், அன்றைய முதல்வர் **Othman Saat** அவர்கள் தலைமை வகித்த தேசிய முன்னணி அரசால் மாநிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டு, தலைநகரில் பெல்டாவுடன் சடனாற்றப் பணிக்கப்பட்டார் (**Federal Land Development Authority**). மாநில அரசில் பணியாற்றியபோது பெற்ற பட்டறிவை விவரிக்கின்றார்: "அலுவலகங்களில் கையூட்டுகள், அதிகார முறைகேடுகள் பெருகின. மாநில அரசு நிர்வாகத்தைப் புரிந்துகொள்ள இயலாததால் பொறுப்பேற்ற அரசியலர்கள் சரிவரப் பணியாற்றுவதில் பின்தங்கினார்கள்.

"அவர்களில் பெரும்பாலோர் தங்களின் கலைநிகழ்ச்சியைக் காணும் சுவைஞர்களாய்த்தான் மக்களைக் கருதினார்கள். மாநில அரசுடனான எனது சேவை மிகக் குறைந்த கால அளவுடையதே என்றாலும் அஃது எமக்கு கசப்பான பட்டறிவுகளைப் பெற்றுத் தந்தது."

1973ஆம் ஆண்டு சொகூர் மாநிலத்திற்குத் திரும்பி வழக்குரைஞராக செயலாற்றத் தொடங்கியவுடன் பல்வேறு கையூட்டுகளோடு அதிகார முறைகேடுகளையும் அம்பலப்படுத்தினார். பதவிப் பித்தாலும், நாட்டின் "இலஞ்ச ஒழிப்புத்துறை" ஆட்சியிலிருப்போரை எதிர்கொள்ள நடுக்கம் கொண்டிருப்பதாலும்தான் இத்தகைய கையூட்டுகளும் அதிகார முறைகேடுகளும் மலிந்துவிட்டன என்று தொடர்ந்தார்.

"சோசலிசமும் மலேசிய மக்கள் (PRM) கட்சியின் போராட்டமும்தான் நாடு எதிர்நோக்கும் அரசியல், பொருளியல், சமூக சிக்கல்களுக்குத் தீர்வு காணும் என்று நம்பியதால்தான் அக்கட்சியில் என்னை இணைத்துக்கொண்டேன். அக்கட்சியிலிருந்து விலக அம்னோ அரசியலர்களால் பன்முறை வலியுறுத்தப்பட்டேன். அவ்வாறு வலியுறுத்தியவர்களில் மூசா ஈத்தாமும் (Musa Hitam) ஒருவராவார். நான் எடுத்த முடிவு மிகச் சரியான ஒன்று என்பதால் அனைத்தையும் புறந்தள்ளினேன்.

"தேசியத்தை எதிர்க்கும், கம்யூனிச சார்புக்கட்சி என்று ஆளும் அரசியல்வாதிகளால் பரப்புரை செய்யப்பட்டது. தலைவர்கள் மட்டுமின்றி கட்சி உறுப்பினர்களும் கைது செய்யப்பட்டதோடு, இங்கே

படிப்பகம்

www.padippakam.com



இனவேற்றுமை அரசியல் நடத்தப்படுவதும் ம.ம.க. பெரிய அளவில் வாக்காளர்களின் ஆதரவைப் பெறுவது தடைப்பட்டுள்ளது.

“நாள்தோறும் நடைபெறுகின்ற அரசியல் நிகழ்வுகளைக் கொண்டு பார்க்குமிடத்து வருங்காலத்தில் மக்கள் சோசலிசத்தை ஏற்றுக்கொள்வார்கள். அவ்வாறு நிகழும்போது மனிதனை மனிதன் சுரண்டும் போக்கு அழிந்து, அரசியல், பொருளியல் என்று எல்லாத் துறைகளிலும் சுதந்திரத் தன்மை கொண்ட விடுதலை பெற்ற சோசலிச நாடாய் மலேசியா திகழும் என்ற எனது நம்பிக்கை மேலும் வலுப்பெருகின்றது” என்றார் முந்தைய நேருரை ஒன்றில்.

“தாசேக் உத்தாரா நடவடிக்கை” என்று அழைக்கப்பெறும் போராட்டத்திற்காக 1974ஆம் ஆண்டு உள்நாட்டு பேணுகைச் சட்டத்தின் (I S A) கீழ் கைது செய்யப்பட்டார். நகர்ப்புற குடியேறிகளின் தலையெழுத்தை முடிவு செய்ய வேண்டி மேற்கொள்ளப்பட்ட போராட்டம். மலாயா பல்கலைக்கழகத்தின் பெருந்தொகை மாணவர்கள் தீவிரமாய் பங்கெடுத்த நடவடிக்கை அது. அரசு நிலத்தைக் கையகப்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் மாணவர்கள் வழக்கு மன்றத்தை எதிர்கொண்டார்கள்.

“இரண்டு எம் (Mahatir, Musa) அரசு நாட்டில் பெரிய மாறுதல்களை ஒன்றும் செய்துவிடாது என்பதுமட்டுமல்ல, முந்தைய தலைமை அமைசர்களின் பாணியையே தொடருவார்கள் என்பது உறுதி. அவற்றால் அடித்தட்டு மக்கள் எந்தப் பயனையும் பெறப் போவதில்லை” என்ற தோழரின் அன்றைய கூற்று (1982) உள்ளங்கை உண்மையாகிவிட்டது.

1983ஆம் ஆண்டு பிரெஞ்சு சோசலிசக்கட்சியின் பொதுப்பேரவைக்கு சிறப்பாளராக அழைக்கப்பட்டு பங்கேற்றவர்க்கு பிள்ளைகள் நால்வர். இவரின் துணைவியார் காவல்துறை மிரட்டல்களைக் கேட்டு சிறிதும் அஞ்சாதவர். பல்வேறு போராட்டங்களில் அவரின் மறத்தன்மையைக் கண்டதுண்டு. உறவினர் வீட்டு நிகழ்வைப் போல் போராட்டங்களில் பிள்ளைகள், பெயரக் குழந்தை என்று குடும்ப உறுப்பினர் அனைவரும் பங்கேற்பது வழமை.

எழுபதில் தேர்தலில் போட்டியிடத்துவங்கியவர் இதுவரை வென்றதில்லை. பல்வேறு ஆளும் கும்பலின் தில்லுமுல்லுகளால் வெற்றி தட்டிப்பறிக்கப்பட்டது.

ஈன்றாள் பசிகாண்பா னாயினுச் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை– என்றது பதவிப்பித்து கொண்ட ஆளுங்கட்சி அரசியலர்க்கு அல்லவே. தேர்தல் தோல்வியைக்கண்டு

படிப்பகம்

www.padippakam.com



அசந்துவிடாது தோழர்கள் அசான் சரீம், சாலே அமாட் போன்ற துணைவர்களோடும் மக்களோடும் இன்றும் களம் காணுகின்றார்.

அறிக்கைகள் பரப்புவது, கட்சி ஏடு விற்பது என்று தோழர்களோடு எப்போதும் ஒருவராய், அன்றைய நினைவுகளை மீண்டும் தொகுக்கும் போது அளவில்லா மகிழ்ச்சி எனக்குள் இப்போதும் எழுகிறது.

இன மத வேறுபாடற்ற குமுகாயத்தைக் கட்டியமைக்கும் எண்ணங்களுக்குச் செயலுரு கொடுக்கும் தோழரின் முயற்சிக்குத்துணை நிற்க வேண்டிய கடப்பாடு இளைய தலைமுறைக்கு உண்டு.

வெல்லட்டும் தோழர் இரசாக்கின் நோக்கங்கள்.

உலகை ஆளட்டும் உழைக்கும் வகுப்பு.

---

# வினாக்கள் - விடைகள்

**வினா:** மலாய்க்காரர்களின் ஒற்றுமை குறித்து உரக்கப் பேசுகின்றாரே டாக்டர் மகாதீர்?

**விடை:** அம்னோ உறுப்பினர்களைத்தவிர ஏனைய கட்சி சார்ந்த, சாராத மலாய்க்காரர்கள் அனைவரும் ஒற்றுமையாகத்தான் இருக்கின்றார்கள். தமது இறுதிக் காலம்வரை பிரதமர் நாற்காலியில் அமர்ந்திருக்க வேண்டுமென்று திட்டமிட்டு மிகநுட்பமாய்க் கட்டிய கோட்டை இடிக்கப்பட்டு விடுமோ என்ற அச்சத்தினால் ஏற்படும் பிதற்றல்தான். மகாதீரின் வலையில் அகப்பட்டு காணாமல் போனவர்களின் பட்டியல் நீளமானது. "செமாங்காட் 46" கட்சியோடு அப்பட்டியல் முடிவுற்றது என்றே வரலாறு எழுதப்பட வேண்டும் என்பதே நம் போன்றோரின் விருப்பம். தாவுவதில் திறமை கொண்ட அணிலும் இறுதியில் மண்ணில் விழுந்தே தீரும் என்பது மலாய்ப் பழமொழி.

**வினா:** நம் அரசாங்கம் (ம.செ.க.) குடும்பவாழ்க்கையின் சிறப்பு பற்றியும் குழந்தைகள் பெற்றுக்கொள்வதின் தேவை பற்றியும் வலியுறுத்துவது எதனால்?

படிப்பகம்

www.padippakam.com



விடை: குடும்பத்திற்கும் தனிச்சொத்துடைமைக்கும் இடையிலான உறவு துண்டிக்கப்படாமல் புரட்சி எவ்வாறு சாத்தியமாகும்? இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டவுடன் முன்னர் படித்ததையும் முழங்கியதையும் மூட்டைகட்டி வைத்துவிடுவதோடு முன்பு விமர்சித்த அதே அமைப்பில் விமர்சிக்கப்பட்ட நபர்களோடு சமரசம் செய்துகொள்பவர்கள் உலகு முழுதும், வரலாற்று நெடுகிலும் காணக்கிடைக்கின்றனர். இங்கே ஒன்றைத் தெளிவுபடுத்த வேண்டும். இல்வாழ்வில் ஈடுபடுபவர்களால் அமைப்பை மாற்றியமைக்கும் பணியில் ஈடுபட இயலாது என்பதல்ல நமது வாதம். அவ்வாறு உரைப்பதும் கூட கண்களைக் கட்டிக்கொண்டு பாதை தெரியவில்லை என்பதலைப் போன்றதே. நாம்குறிப்பிட வருவது பெரும்பான்மை பற்றித்தான். ஓர்மின்கள் பெருகுவதை இவ்வரசுகள் விரும்புவதில்லை. குடும்ப வாழ்க்கையில் ஈடுபடுத்திப் போர்க்குணத்தை மழுங்கடிப்பதுதான் நோக்கம். அப்படியானதே இவர்களின் குடும்ப வாழ்க்கை பற்றிய அறவுரை, அறிவுரைகள்.

---

## ஒரு பயணத்தின் சித்திரம்

வட மலேசியாவின் வெள்ளி மாநிலமான பேராக்கின் பீடோர் நகரத்திலிருந்து தென் மாநிலத் தலைநகர் சொகூர் பாரு நோக்கிய நள்ளிரவுப் பேருந்துச் செலவு.

இருக்கையில் அமர்ந்ததும், விரல்களை மடக்கி, முழங்கையை உயர்த்தி விடை தந்தார் தோழர் உலக நம்பி. உரத்து சீழ்க்கை அடிப்பதுபோல் குறட்டை விடுபவர் எவராகிலும் பக்கத்தில் வந்து அமர்ந்தால் என் செய்வது என்ற எண்ணத்தில் மூழ்கியிருந்தேன். அதுபோழ்து, ‘சதை பிடிக்காமல் இருந்தால் உடம்பென்று ஒத்துக்கொள்ள மாட்டீரோ?’ என்று வினவும் தோற்றப்பொலிவோடும், “Excuse me, Can you move in?” என்ற விழைதலோடும் அருகில் வந்தமர்ந்தார் நங்கையொருவர்.

நிமையங்கள் அமைவாய்க் கழிந்தன. முன்பின் இருக்கைகளில் அமர்ந்திருந்த மலாய்க் கன்னியர் என் அடையாளத்தை அறிந்துகொள்ள முயல்வதை உணர்ந்தேன். என் நடை, உடை, தோற்றம் உலகோர்க்கு

படிப்பகம்

www.padippakam.com



ஏற்படுத்தும் குழப்பத்தின் விளைவு அது.

பார்வையைப் பக்கவாட்டில் திருப்பி, "எங்கே செல்கிறீர்கள்?" என்றேன். "உங்களை நான் என்ன சொல்லி விளிப்பது?" என் என்ற வினாவை விடையாய்த் தந்தார் அருகில் அமர்ந்த பயணி. அறிமுகம் முடிந்ததும் பிறமொழியைத் தவிர்த்துத் தமிழில் உரையாடத் தொடங்கினோம். "உரையை இடையே நிறுத்துவது என் வழக்கமல்ல. சலிப்பு ஏற்படும்போது உறங்குங்கள்," என்ற முன்னுரைக்கு, "நெடுநேரம் விழித்திருக்க இயலாது," என்றார். பின்னர் "தொடருங்கள்" என்று விரைவுபடுத்தினார் அம்பிகை. ஆம், அவரின் பெயர் அது.

நீர்க்கட்டண (Indah water) உயர்வு குறித்து தமது நிறைவின்மையையும் தம் தந்தையின் கருத்தையும் வெளிப்படுத்தி அவரே துவங்கி வைத்தார். மூன்று மணி நேரங்கள் கழித்து, இரண்டு இணை கண்கள்மட்டுமே விழித்திருக்கின்றன என்றேன். ஓட்டுநரை மறந்துவிட்டீர்களே! தந்நலம்தானே காரணம் என்று சீண்டினார். உள்நாட்டு அபசியலோடு, உலக அரசியல், பொருளியலையும், மதம் பிடிப்பதால் மாந்தக் குலம் அடையும் இழப்புகள், பெண்ணியம் என்று பலவற்றையும் பகிர்ந்துகொண்டோம். உரைவீச்சையும் விட்டுவைக்கவில்லை. பாவிற்கும் உரைவீச்சிற்கும் இடையிலான வேறுபாடுகளை விளக்க வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டேன்

'ஐயா, என்ன சுத்த, புலித் தமிழில் பேசுறீங்க!' என்று குறிக்கிட்டார் அம்பிகை. 'தூயதமிழ், அழுக்குத் தமிழ் என்றெல்லாம் ஒன்றுமில்லை. ஆங்கிலத்திலும், மலாய் மொழியிலும் பேசும்போது இலக்கண, ஒலிப்புப் பிழைகள் ஏற்படக்கூடாது என்று மிகுந்த அக்கறை கொள்ளும் நாம் தமிழில் உரையாடும் போது மட்டும் அவற்றை கருத்தில் கொள்வதில்லையே, ஏன்? தமிழ் என்றாலே செந்தமிழ்தான். அதன் இயல்புக்கு ஏற்றவாறு பேசுகின்றேன். அவ்வளவே,' என்று நிறுத்தினேன். தமிழ் மொழி பற்றிய உண்மைகள் பல மறைக்கப்பட்டன. அப்படி அழித்தொழிக்கப்பட்டவைகளை மீட்டெடுத்து மெய்ப்பிக்க தேவநேயரும் அவர் வழிவந்தோரும் பட்ட பாடுகள் கொஞ்சநஞ்சமல்ல என்று தொடர்ந்தேன்.

தொல்காப்பியர் துவங்கி அண்மைக் காலம் வரையிலான தமிழின மீட்பு முயற்சிகளுக்குப் பாவாணர் என்றே பெயரிடப்படல் வேண்டுமென்பார் மொழி ஞாயிற்றின் பெரும் பணியை விவரிக்க வந்த அவரின் மாணவர் மாணிக்கப்போராளி பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

www.padippakam.com



தமிழ் தனித்தியங்கும் தன்மை அற்றது என்ற பொய்மை மயக்கத்தின், உருவகத்தின் மேல் எழுப்பப்பட்ட கோட்டை ஆட்டங் காணத் துவங்கியது தேவநேயத்தின் உழைப்பினால்தான். பாவாணரின் படைப்புகள் யாவும் போர்க்கருவிகள்தாம், ஐயமில்லை.

பண்பட்ட செந்தமிழாற் பைந்தமிழா முன்னேறக்
கண்கொட்டுங் காலுங் கவலையறேல்—புண்பட்டு
மாறா யிருப்பவெல்லாம் மாற்றிப் புரட்சிசெய்
சூறா வளிபோற் சுழன்று.

என்று கொதித்தது அத்தமிழரிமா என்பது பேருண்மை.

ஆனால் அத்தகைய புரட்சியொன்றுக்கு தலைமையேற்க அணியமாய் இருந்தாரா ஐயா என்பதனை நன்கு அறிந்து கொள்ளாமல் மண் விடுதலைப் போராட்டத்திற்கு அவ் ஈக எரியைத் தலைவராக அறிவித்தது உலக தமிழ்க் கழகத்தில் முரணியக்கம் தோன்றுவதற்கு வழி அமைத்தது. விளைவு, கழகம் பல பிரிவுகளாகி சிறுத்து இறுதியில் திராவிடத்திற்கு அடிமையாகி தமிழிய விடுதலை உணர்வும் மழுங்கடிக்கப்பட்டது.

பேதைக்கில்லை ஊதியம்,
பேடிக்கில்லை படைக்கலம்,
அடிமைக்கில்லை விடுதலை,
அஞ்சிக்கில்லை அடைக்கலம்.

என்று நாட்கும் மணிக்கும் உழைத்த மொழிமீட்பரின் நூற்றாண்டு இது என்று இடைவெளி விட்டேன்.

ஈழ விடுதலைப் போராட்டத்தில் மிகுந்த ஆர்வமும் தெளிவும் கொண்டிருந்தார். அயர்வு கருதி உரையாடலை நிறுத்தி கண் இமைகளை மூடினோம். ஒரு மணி நேர இடைவெளியில் தேம்புதல் கேட்டு, கண் விழித்து ‘அழுகின்றீர்களா?’ என்றேன்! ‘இல்லை’ யெனத் தலையசைத்தார். சில பத்து நிமையங்களுக்குப்பின் மீண்டும் வினவியபோது ‘இல்ல...லா’ என்ற கொஞ்சும்மொழியில் கடுங்குளிர் என்று சொன்னார்.

‘திறனாய்வுகள், உங்கள் குருதியை சூடேற்றி குளிரைப் போக்குமா? முயன்று பார்க்கிறேன்’ என்று மீண்டும் தொடங்கினேன். முந்தைய பொருள் முதலாளர்களைச் சொல்லி மடமை மயக்க மூட்டி மந்தைகளாக்கும் மதங்களின் தலைவர்களையும் அவர் தம் கோட்பாடுகளையும் விளக்கினேன். ஏகல், பாயர்பாக் வரை உள் வாங்கிக்கொண்டே வந்தவர் டிரியர் நகரம் தந்த மூரின் பெரும் பணியைக் கூற முயன்றபோது, காரலைப் பற்றித் தாம் அறிந்தவற்றைச் சொல்லி என்னை வியப்புக்குள்ளாக்கினார்.

படிப்பகம்

www.padippakam.com



கற்கை நன்றே... என்ற முதுமொழிக்கேற்ப, கடன் உதவி பெற்றுக் கல்விக் கழகம் சென்றவர் அம்பிகை. பட்டம் பெற்ற குழுமம் ஒன்றில் அண்மை ஓராண்டு காலமாய் பணி செய்யும் அம்பிகை, பட்டறிவின் விளைச்சலால், அரத்தம் உறிஞ்சும் சுரண்டல் கூட்டத்தின் தன்மைகளை ஆழமாய் அறிந்துள்ளார்.

பிரிய விருப்பமில்லை என்றாலும் விடை பெறத்தான் வேண்டும் என்று பார்வையால் உணர்த்தி கைகுலுக்கி விடைபெற்ற வேளை, இப்படியொரு மனிதனை அதிலும் இளைஞனை இதற்கு முன் கண்டதில்லை என்று சொல்லி பேருந்து படிக்கட்டுகளில் அவர் இறங்கிய போது காலை மணி ஆறு.

அப்பெண்ணின் விழிப்புணர்வின் வெளிப்பாட்டுக்கோலங்களை மெச்சிக்கொண்டே வீடு சேர்ந்தேன்.

பெருமழை பெய்து விட்ட மாலைப்பொழுது. தொலை பேசி அனைத்தையும் பதிவு செய்தேன். தோழர் கார்க்கி படைத்துக் காட்டிய நத்தாசா, சாசா, லூட்மிலா போன்றோரை உருவாக்குவதும் நம் பொறுப்புதானே.

அவ்விளம் பெண்ணிடமிருந்து கற்பதற்கும், கற்பிப்பதற்கும் எவ்வளவு உள்ளன! முகவரியை பெற்றுக்கொள்ளாது வந்துள்ளீர்களே என்றார், முரண்களோடு உடன்பாடு கொண்டு, ஆய்வு படிப்பினைகளால் மாந்தக் குல இன்னல்களுக்கு மார்க்சியமே மாமருந்து என்ற முடிவுக்கு வந்து சேர்ந்த தோழர் லின் பியாவ் (Lin Piao).

---

மலரும் செப்தம்பர் 21, 22, 23ஆம் நாட்களில் கனடாவின் தொரந்தோ ( Toronto )வில் நடைபெறவிருக்கும் 'சோவியத்து மக்களுடனான நட்புணர்வு மற்றும் ஒருமைப்பாட்டுக்கான உலக மாநாடு' அதன் நோக்கத்தில் வெற்றிகளைக் குவிக்க விழைகின்றோம்.

**World Congress for Friendship and Solidarity with Soviet People**

**September 21, 22, 23 - 2001, Toronto, Canada**

படிப்பகம்

www.padippakam.com

# புத்தர் சிலையும் கயமையின் கரிசனமும்

இந்தியாவின் பிரதமர் வாச்பேயி, தலிபான் அரசின் புத்தர் சிலை உடைக்கும் நடவடிக்கை உலகப் போருக்கு வழி வகுக்கும் என்று பேசியதாகப் பத்திரிகையில் செய்தி வெளிவந்தது.

ஒரு தூய்மையான இசுலாமிய நாட்டைக் கட்டியெழுப்புவது தங்களது இலக்கு என்று தலிபானும் முந்தைய முச்சாயிடினும் (**Taleban, Mujahedin**) பலமுறை அறிவித்துள்ளனர். அந்தக் காரணத்தால் சிலை தகர்ப்பு பற்றிய அறிவிப்பு வந்ததும் நமக்கு வியப்பொன்றும் ஏற்படவில்லை. குர் ஆன் ஓதியதன் பலன் அது.

எங்களுக்குப் புத்தனைப் போதித்த நீ இச்செயல் கண்டு சீற்றம் கொள்ளாதது வருத்தத்தோடு வியப்பையும் ஏற்படுத்துகின்றது என்று எல்லா மத நண்பர்களோடு மார்க்கத்தோரும் உரைக்கின்றனர். எம்மதமாயினும் மக்களை மூடராக்கி அவர்களிடத்தில் பேத உணர்வைத் தோற்றுவிப்பதன் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டதுதான்.

இந்நிலையில் வாச்பேயியின் கண்டனமும் கருத்தும் எதன்பாற் பட்டது? தூக்கத்தைவிட தொழுகை மேலானது என்று கடைப்பிடிப்போரின் நடவடிக்கையினை விமர்சிக்கும் இந்த பிரம்மச்சாரி சார்ந்திருக்கும் கட்சியும், அதன் துணைஅமைப்புகளின் தொண்டர்களும் சிலகாலத்திற்கு முன் பாபர் பள்ளிவாசலை இடித்துத் தரைமட்டமாக்கிக் கோர தாண்டவமாடிய போது எங்கு போனதாம் அகிம்சையும், சகிப்புணர்வும், வரலாற்று ஆவணங்களை- கட்டிடங்களை பாதுகாக்க வேண்டுமென்ற எண்ணமும்?

சரி, அது போகட்டும். ஈழ நாட்டுத் தேவாலயங்களில் ஏசுவையும் சிலுவையையும் தனித்தனியே பிரித்தெடுத்து ஆனந்தம் கொண்டபோது (மடுமாதாவின் ஊர்வலம் இன்றும் இடையூற்றை எதிர்கொள்கிறது.) கோர சம்பவங்களை உருவாக்குபவன் என்று கிருகிய சூத்திரங்கள் சொல்லும் கணபதி சிலையைக் கிணற்றில் போட்டுவிட்டு ''நாண்டகியே கணதெய்யோ'' (குளிக்கப் போயிட்டார்) என்று சிங்கள ராணுவத்தி

படிப்பகம்

www.padippakam.com



தினர் எழுதிவைத்தபோது குறட்டை விட்டுக்கொண்டிருந்தார்களா இந்த வாமாச்சாரிகள்!

தம்மைச் சார்ந்தோரும், தங்களுக்கு வேண்டியோரும் எது செய்தாலும் அவற்றைக் கண்டுகொள்ளாதவர்கள் அல்லது நியாயப்படுத்துபவர்கள் முரண்படுவோர் செய்வது எதுவாயினும் அவற்றை எதிர்க்கத்தான் வேண்டும் என்று முண்டா தட்டி முழக்கமிடுவதை எப்படி ஏற்பது?

கொல்கத்தாவில் ஆர்ப்பாட்டம், புதுதில்லியில் 'குர்ரான் எரிப்பு' என்று பத்திரிகைகள் பலவாறு சொல்கின்றன. பாபர் மசூதி இடிக்கப்பட்ட போதும், அதன் பின்னரும் தென்கிழக்காசிய ஹிந்து கோயில்களுக்கும் கடவுள் பொம்மைகளுக்கும் எந்தச் சேதமும் ஏற்பட்டுவிடவில்லை. யார் மதவெறியர்கள்? முவமார் கடாபியின் ஆட்சிக்குட்பட்டவர்களா! லால் கிருச்ண அத்வானியின் அடியாட்களா?

புருச பிரதானத்தை ஒத்த ஆணாதிக்க முறையை அடக்க பெண் கல்விக்கு முதலிடம் தந்தது துவங்கி, அவர்களின் முன்னேற்றத்திற்கென பல்வேறு திட்டங்களை செயலாக்கத் தொடங்கிய டாக்டர் Najibullahவையும் அவர்தம் சகோதரரையும் தூக்கிலிட முடிவு செய்து அதை நிறைவேற்றியபோது, தடுத்து நிறுத்த எந்தவொரு சிறு துரும்பையும் அசைக்காத உலகம், சிலி நாட்டுக் கொலைகார பினாட்சேவைக் காப்பதில் காட்டும் அக்கறையில் காற்பங்குகூட மேற்கொள்ளாத அரசுகள், உருவ வழிபாட்டிற்கு ஆதாரமான புராண புளுகுகளை எதிர்த்து இயக்கங்கட்டிய வரலாற்றுப் பொருள் முதல்வாதியின் படிமம் தகர்க்கப்பட்டது கண்டு கண்ணீர் வடிக்கின்றது.

எங்களின் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் (தலைமுறை) அழிக்கத் துடிக்கும் இந்த உலகமே, கடந்த காலத்தைக் காப்பதில் மட்டும் அக்கறை கொள்வது ஏன் என்று வினா எழுப்புகின்றார் தலிபான் அரசின் சார்பில் பேசவல்லவர். பதில் சொல்லட்டும் யோக்கியர்கள்.

★

பண்பாட்டுப் புரட்சி ஒன்றிற்காய்ப் புறப்பட்டோரின்
தென்கிழக்காசிய வெளியீடு.

www.padippakam.com

# தோழர் ச்டாலின் போன்றதொரு தலைமை

சீன வம்சாவளியினர் முற்றிலும் துடைத்தொழிக்கப்பட்டுவிட்டனர் என்றும், அவர்கள் வாழ்வதற்கு ஏற்புடையதல்ல இந்தோனேசியா என்பது போன்ற மாய்மாலங்கள் தோற்றுவிக்கப்பட்டுவிட்டன. இஃது உண்மையா?

அறுபதுகளில் மொழியின் பேரால் இனமீட்புக்காகத் தமிழியக்கத்தவராலும் மாணவர்களாலும் முன்னெடுக்கப்பட்ட விடுதலைக்கான கிளர்ச்சியின் விளைவு எவ்வாறு ஏழையின் சிரிப்பில் இறைவனைக் கண்ட திராவிட வாரிசுகளுக்குப் பயன்தந்து ஆட்சிபீடம் ஏற்றியதோ, அப்படியானதே இங்கும் நிகழ்ந்தது எப்படி?

சுகார்த்தோ என்ற கொடுங்கோலாட்சியாளனை வீழ்த்த வடஅமெரிக்க உளவு நிறுவனத்தின் வழிகாட்டலில் ஒன்றுதிரண்டு முழுஉண்மையறியா (முன்னரே இயங்கியோரும்) மாணவர்கள் நிகழ்த்திக் காட்டிய போராட்டங்களின் விளைச்சல்கள், நடுத்தர அரசியல் வாதிகள் ஆட்சிக்கட்டிலைக் கைப்பற்ற வழிகோலியது.

தடியடிக்கும் குண்டடிக்கும் இரையான மாணவச் செல்வங்களையும் ஏதுமறியா இளைஞர்கள் – பொது மக்களையும் இன்று எந்த அரசியல்வாதிகள் நினைவில் வைத்துள்ளார்கள்?

மக்கள் நலனே நாட்டு நலன் என்று முதன்மைப்படுத்தும் நன்கு கட்டமைக்கப்பட்ட அமைப்பு ஒன்று இல்லாமல் போனதாலேயே இவ்வாறு நேர்ந்தது. தடியெடுத்தவர் எல்லாம் தண்டலர் ஆனார்கள். திறமைகள் சீர்தூக்கிப் பார்க்கப்படவில்லை. இன, மத உணர்வுகளைத் தூண்டி, கூட்டம் சேர்த்தோரெல்லாரும் நாடாளுமன்ற நாற்காலிகளுக்கு குடேற்றுகின்றனர்.

தீவுக் கூட்டங்கள் தீயில் வெந்துகொண்டிருந்த வேளை, கொழுத்த செல்வந்த சீன வம்சாவளியினர் நாட்டை விட்டோடிவிட, நடுத்தர சீனர்கள் வாய்ப்பில்லாமல் இங்கேயே தங்கிவிட்டனர் மாணவர் எழுச்சிகளில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களோடு காலிகளும் பங்கேற்றனர். காலனிய காலந்தொட்டு தங்கள் முன்னோர்களின் உழைப்பு உறிஞ்சப்பட்டு, அடிப்

படிப்பகம்

www.padippakam.com



படை தேவைகள்கூட மறுக்கப்பட்டதோடு உழைப்பாற்றலைச் சுரண்டிக் கொழுத்த பூர்சுவா சீன முதலாளிகளின்மேல் ஏற்பட்ட வெறுப்பு ஊழித்தீயாய், எரிமலையாய் வெடித்தது உண்மை. வயிற்றுப்பாட்டுக்கு வழியற்றுப்போனபின் இப்படியெல்லாம் நிகழ்ந்தது. இளைஞர்களின் வரம்புமீறுதல்களுக்கு அவர்கள் வளர்த்தெடுத்த அமைப்பே பொறுப்பேற்க வேண்டும்.

அதற்குப்பின் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் சீன வம்சாவளியினரை மிகுந்த அநுதாபத்திற்கு உரியவர்களாக்கிவிட்டது. இது மிகைப்படுத்தப்பட்ட ஒன்று என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.

சீன மொழிப் பள்ளிகள், மாண்டாரின் மொழியேடு, பல்வேறு புதிய வழிபாட்டிடங்கள் என்று தினம்தினம் பெருகிக்கொண்டே வருகின்றது. இன்றைக்கும் மளிகைக்கடை, மருந்துக்கடை, நகைக் கடை, பயண முகவாண்மை, பேரங்காடிகள், பெரும் வணிக நிறுவனங்கள் என்று அனைத்தும் சீனர் ஆளுமையில்தான்.

இந்நிலையில் சீனப்பெருநிலத்திலிருந்து ஓசைப்படாமல் வந்து குடியேறும் எண்ணிக்கையினர் மறுபுறம். இந்நிலை தொடர்ந்தால் எதில் போய் முடியும்?

இசுலாம் தோற்றால் மற்றுமொரு தாய்லாந்தாகும் இந்தோனேசியா என்றால், பெரும்பான்மையின சாவா மக்களின் பண்பாட்டுக்கூறுகள், பழக்கவழக்கங்கள் அவர்களைத் தலிபான்களாக்காது என்பதோடு, அமைகின்ற அரசுகள் மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு இயற்கைவளங்களை ஏற்றுமதியின்வழி பொருளாக்கி, குடிமக்களின் வாழ்க்கை நிலையினை மேம்படுத்த முயன்று பணியாற்றினால் நாடு சிறந்து கொழிக்கும்.

அத்தகைய நிலைக்கு தோழர் ச்டாலினைப் போன்ற தலைமை வேண்டும். சிதறிக்கிடக்கும் பழைய பொதுவுடைமைக் கட்சியினர் மார்க்கியத்தை வரித்துக்கொண்ட இன்றைய இளைஞர்கள், ''சே'' குவேராதை வழிகாட்டியாய் ஏற்றோர் அனைவரும் திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டும்.

★

மாந்த விடுதலைக்கும், ஏற்றத்தாழ்வு, சுரண்டலற்ற
குமுகக் கட்டமைப்புக்கும்
மார்க்கியமே நெறிமுறை.

படிப்பகம்

www.padippakam.com

# நாடகமன்றக் குறிப்பு

அண்மைய கம்போங் மேடான் கலவரங்களுக்கு வறுமை மட்டுமே காரணம் என்பதுபோல் அரசியல்வாதிகளின் வாக்குமூலங்களும் அறிக்கைகளும் வெளியிடப்படுகின்றன. அரசியல் பிழைப்புக்காரர்களின் கூற்றுப்படியே- அதாவது தமிழ் இளைஞர்கள் மிகவும் அதிக அளவில் குற்றச் செயல்களிலும் வன்முறைகளிலும் ஈடுபாடு கொள்வதற்கான காரணம் வேலையின்மையும் அதனால் ஏற்படும் வருவாயின்மையும்தான் என வாதத்துக்கு வைத்துக்கொள்வோம். அனைத்து வகையான வாய்ப்புவசதிகளும் செய்துதரப்படுவதாகக் கருதப்படும்- ஒட்டுமொத்தமாய் மலாய்க்காரர்களென சொல்லப்பெறுகின்ற இனக்குழு இளைஞர்களிடத்தில் ஒழுக்கக்கேடுகளும், வன்முறைகளும், பாலியல் ஒடுக்குமுறைகளோடு போதைப்பொருள் பயன்பாடுகளுமாக மிதமிஞ்சி வருகின்றனவே! வாழ்க்கையை நடத்துவதற்குப் போதிய வருமானம் கொண்டோரிடத்திலும் சமூகத்திற்கு அவமானம் கொணரும் அனைத்துத் தன்மைகளும் பிணைந்துகிடக்கின்றனவே, ஏன்?

சிறிது காலத்துக்கு முன்புவரை இந்திய இளைஞர்களின் சீரழிவுகளுக்கு சினிமாதான் காரணம் என்று மீண்டும் மீண்டும் முழங்கப்பட்டு இன்று அது மறக்கப்பட்டுவிட்டது. இன்றைய நிலையில் இந்தியாவிலிருந்து வெளியிடப்படும் திரைப்படங்கள் யாவும் கலைத்தரம் கொண்டவையாகவும், அன்பைப் போதிக்கும்- அறிவு வளத்திற்கு வழிவகுக்கும் ஊடகமாகவும் விளங்குவதால் அல்ல. மாறாய், விளக்கங்கள் எடுபடவில்லை என்பதால்தான். சினிமாவினால் கேடுகள் இல்லை என்பதல்ல எம் கருத்து. அது மட்டுமல்ல; ஆனால் அதுவும் ஒரு காரணம் என்பதே எமது முன்வைப்பு. மற்றவை இனபேத தேர்தல் பாதை, கட்சிகளின் ஆும்பன் அரசியல், தனிச்சொத்துடைமை மேல் கொண்ட பற்று, இழிந்த தன்மையிலான இதழ்களும் மதங்களின் புராண 'புளுகு'களுமாகும். தீர்வுக்கான ஆலோசனைகூடக் கருத்தில் கொள்ளப்படவில்லை. காரணங்களோடு விளக்கங்களும் மாற்றி மாற்றிச் சொல்லப்படுகின்றன. அவ்வளவே.

கல்வியறிவற்ற இளைஞர்களால்தான் இவ்வாறான சம்பவங்கள் ஏற்படுகின்றன. விரக்தியால் சீரழிவுக

www.padippakam.com



ளுக்கு ஆளாகின்றனர். சமூகத்தின், நாட்டின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கின்றனர் என்பதும் மேலே சொன்னோரின் வாதம்.

கலாசாலை சென்று பட்டம் பெற்று பணியாற்றும் முந்தைய மாணவர்கள், பாடம் படிக்கும் நாளைய வழிகாட்டிகளான இன்றைய மாணவர்களிடையே மட்டும் என்ன நிலையாம்?

மாணவர்கள் பல்கலை வளாகத்தினுள் தாம் சார்ந்த இனக்குழுவினர் தவிர அயலரோடு கலப்பதில்லை என்பதுதானே அண்மைய நாளிதழ்ச் செய்தி.

தீர ஆய்ந்தால் தீர்வொன்றுக்கான வழிவகைகளை கண்டறியலாம். நிரந்தரத் தீர்வு ஏற்படுவதை ஆட்சியிலிருப்போர் விரும்புவதில்லை என்பதே நடப்பியல் உண்மை.

'தோட்டங்களை விட்டு வெளியேறுங்கள்' என்று முழங்கிய சாமிவேல் மந்திரி, வெளியேறி நகர்ப்புறங்களுக்கு வந்தோரின்–குறிப்பாய் இளைய தலைமுறையினரின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு திட்டங்கள் தீட்டினாரா? முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டனவா?

பாடப் புத்தகங்கள், கருவிகள், ஆசிரியர்கள் பற்றாக்குறை என்று இவை யாவும் பயிலுவதற்கான ஆர்வத்தைக் குறைத்து விடுகின்றன. கூரை சரிந்தும் கட்டடங்கள் சாய்ந்த நிலையிலும் பல்வேறு தமிழ்ப்பள்ளிகள் தீபகற்பம் முழுவதும். இத்தகைய சூழலில் ஆறு ஆண்டுகளைக் கழித்து இடைநிலைக் கல்வியில் மாற்றின மாணவர்களோடு போட்டியிட இயலாது பின்னடைவுக்கு ஆளாகின்றனர். இவற்றுள் ஆசிரியர்கள் காட்டும் பேதப்பாகுபாடுகளும் அடக்கம்.

இந்தியாவிலிருந்து வெளிவரும் ஏடுகளும், திரைப்படங்களும் நடிகர்களோடு மதபோதகர்களும் மிச்ச சொச்ச நன்னெறிகளையும் மறக்கடித்துவிடுகின்றனர்.

கொலை, கொள்ளை, ரவுடித்தனம், இரகசியக் கும்பல்கள் அமைப்பது என்று சீரழிகின்றனர் என்றும் நாட்டில் நிகழும் குற்றச் செயல்களில் பாரிய பங்கு வகிப்பவர்கள் தமிழிளைஞர்கள்தாம் என்று பொறுப்பு மிகுந்த(!) அரசியல்வாதிகள் ஒருதலைச் சார்பாய் கருத்துரைக்கின்றார்களே அன்றி, மேற்சொன்னது போன்றதானவற்றில் தங்களை இணைத்துக்கொள்வதற்கு எவை காரணம், என்ன காரணம் என்று சமூகக் காவலர்கள் எனச் சொல்லப்படுவோர் என்றாவது எண்ணிப்பார்த்திருப்பார்களா!

படிப்பகம்

www.padippakam.com



வாழ்க்கை அமைப்பிலுள்ள குறைபாட்டினால்தான் மக்கள் குற்றவாளியாகிறார்கள் என்ற கார்க்கியின் கூற்றை எந்த அரசியல்வாதியாகிலும் கண்டறிந்திருப்பார்களா?

கலவரம் நடந்த பகுதிகளில் வதியும் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்ற வாக்குறுதிகளும் எழுதப்படாத வாய்மொழி அறிவிப்புகளும் தேர்தல் காலத்தைப் போல் வழங்கப்படுகின்றன. இவையாவும் ஆளுங்கும்பலின் கிட்டிப்புள் விளையாட்டே, கண் துடைப்பே.

உங்கள் பண்பாடுகளைக் காத்துக்கொள்ள வேண்டுமானால் நீ தொங்சான் போ! நீ இந்தியா போ! என்று சொன்னது யார்?

இந்தியனையும் பாம்பையும் கண்டால், பாம்பை விட்டுவிடு, இந்தியனை முதலில் அடி என்று நாடாளுமன்றத்தில் பேசியது யார்?

'மலத்திலிருந்து பிறந்தவர்கள் இந்தியர்கள்!' என்று அதே நாட்டை ஆளும் மன்றத்தில் பேசியவர் யார்?

எதிர்க்கட்சிகளுக்கு வாக்களித்து தேர்வு செய்தால் "மே" கலவரம் மீண்டும் மூளும் என்று வாக்காளர்களை அச்சுறுத்தியது யார்?

லீ கிம் சாயின் (Lee Kim Sai) டத்தோ பட்டம் பறிக்கப்பட்டதே அந்த சர்ச்சைக்குக் காரணமானவர்கள் யார்?

திரு. இரசாலி அம்சா அவர்கள் தலைமை வகித்த "மக்கள் சக்தி" (People's Power) கூட்டணியைத் தேர்ந்தெடுத்து, அவர் பிரதமரானால் மலேசியா, கிருத்துவ நாடாக மாறிவிடும் என்று பித்தலாட்ட அரசியல் பிரசாரம் செய்தது யார்? சோசலிச்டுகளா? அல்லது சமூக சனநாயகவாதிகளா?

ஆளும் பின் அணியின் முன் அணியான புதிய அம்னோக் காரர்கள் தேச ஒருமைப்பாட்டுக்கு பங்கம் ஏற்படுத்திய, அரசியல் தளம்பல்கள் ஏற்படக் காரணமாயிருந்தவர்கள்மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக வரலாற்றுக் குறிப்புக்கூட இல்லை.

இந்நாட்டு தமிழரின் காவலன் ம இ கா மட்டும்தான் என்றும், அக்கட்சியின் தலைமைத்துவத்தை சில ஐந்து ஆண்டுகளாகவே தம் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதால் முழு அமைச்சராய் இருப்பதற்குத் தாம் மட்டுமே தகுதி பெற்றவர் என்று செயல்பட்டுக் கொண்டிருக்கும் சாமிவேலு, தான் தமிழரினத்தை சுரண்டி அவர்களைக் கடன்காரர்களாக, ஒட்டாண்டிகளாக ஆக்கியதைத் தவிர வேறொன்றும் செய்துவிடவில்லல என்பதை ஏற்று, விலகிச்செல்ல வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



தமிழரும், இந்தியர் என்று பட்டியலிடப்படுவோரும் நடந்து முடிந்த சம்பவத்திலிருந்து பாடம் படிக்க வேண்டும்.

மானமிழந்த கட்சியையும் (ம இ கா), நிதி கேட்டு நெடுந் தொலைவு நடந்தவரின் நல்வாழ்வு இயக்கத்தையும் (ஐ பி எப்) மட்டு மல்ல, இனவாதம் கக்கும் புதிய அம்னோ (New Umno), மலேசிய சீனர் சங்கம்(MCA), தொடங்கப்பட்ட குறிகோளிலிருந்து தடம் புரண்டு சீன இன கட்சியாகி விட்ட கெரக்கான் (Gerakan), வர லாறு படைத்து இன்று கேலி செய்யப்படும் நிலைக்கு தாழ்ந்துவிட்ட புது ம மு க (P P P) போன்ற கட்சிகளை உறுப்பாய் கொண்டதும் முதல் தேர்தல் துவங்கி, தொடர்ந்து அரசமைத்து ஆட்சி செலுத் திக் கொண்டிருப்பதுமான பிற்போக்குவாத கூட்டணியையும் புறக் கணிக்க வேண்டும்.

இங்கே மக்கள் நலனை முதன்மைப்படுத்துவோர் குறைந்த எண்ணிக்கையிலும் வலிமை குன்றியும் இருக்கின்ற நிலையில் மாற் றுத் தீர்வாய் குறைந்த அளவு மகாதீரை தலைமையிலிருந்து அகற் றவேண்டும். அவற்றோடு பாடத்திட்டங்களில் மாற்றங்கள் செய் யப்படுவதும் மக்களுக்குப் படிப்பிப்பதும் மிகத் தேவை.

இவ்வாறான அடிப்படைகளைத் துவங்காவிட்டால் பல பத்து ஆண்டுகள் கழிந்தாலும் மலை நாட்டில் இனங்களுக்கிடையிலான முரண்போக்குகள் தொடருவதோடு கூர்மையடையவும் செய்யும். ஏனெனில் தொடர்ந்து கதிரைகளை ஆக்கிரமித்து அதிகாரசுவையை அனுபவிக்க விரும்பி ஆள்வோர் உருவாக்கிய அசிங்கப் பண்டங் களுக்கு சந்தையில் நல்லவரவேற்பு இருப்பது கண்கூடாய்க் காணக் கிடைக்கின்றது.

சிறுபான்மையினரோடு மண்ணின் மைந்தர்களான பழங்குடி மக்களின் வாழ்க்கை நிலையும் சொல்லக்கூடியதாய் இல்லை. 81% ஒராங் அச்லிகள் (Orang Asli) வறுமையில் உழல்கின்றனர், வயிற் றுப் பாட்டிற்கு வழியின்றி வாழ்கின்றனர். மேற்கு மலேசியாவின் மலைத்தொடர்களிலும், காடுகளிலும் வாழும் செமாய், சக்கூன், சக்காய் (Semai, Jakun, Sakai) போன்ற இப்பழங்குடியினர் நாட்டு மக்கட் தொகையில் ஐந்து விழுக்காட்டினராவர்.

20 20 இருபது இருபது, தூரநோக்கு, தொழில் வள நாடாக் குவது என்றெல்லாம் சொல்லி வகைதொகையின்றி காடுகள் அழிக் கப்படுவதால், எதிர்கால் வாழ்வு என்னவாகுமோ என்று கலங்கி நிற்கும் கூட்டுடைமை வாழ்க்கையினரான கிழக்கு மலேசியாவின் பழங்குடிகளான இபான், பெனான், கடசான், மூருட், டுசுன், டாயாக்கோடு இன்னும் பிற இனக்குழுவினர் கற்பித்து வென்றெடுப் பதின் வழியேதான் சூழ்ச்சிகளை முறியடித்து உழைக்கும் மக்க ளுக்கான விடிவிற்கு வழிசோல முடியும்.

அணி திரளுங்கள், அமைப்பை மாற்றுவோம்.

படிப்பகம்

www.padippakam.com



# தோழர்களின் வாழ்வில்...

1959இல் "L'observateur" என்ற இடதுசாரி பத்திரிகை வெளியிடப்பட்டது. கொம்போங் சோம்மின் வழக்காடு மன்றத் தலைவரின் மூத்த மகனான கியூ சம்பான்தான் அதன் ஆசிரியர்.

பள்ளியில் பிரெஞ்சு மொழி கற்பிப்பதற்கு ஒதுக்கப்பட வேண்டிய நேரங் குறித்து சிகனூக் (இன்றைய கம்போடியா மன்னர்) எடுத்த முடிவை அப்பத்திரிகையைச் சார்ந்தோர் எதிர்த்தனர்.

சீருடை அணியாத காவல்துறையினரால் நடுத்தெருவில்வைத்து தாக்கப்பட்டார் தோழர் கியூ சம்பான். "பாசிச்டுகளின் ஏகாதிபத்திய சிந்தனைகளின் வெளிப்பாடு" என்று அச்சம்பவம் குறித்து எழுதினார் தோழர். ஆகச்டு மாதத்தில் சிகானூக்கின் அனுமதியோடு ஒருங்கிணைக்கப்பட்ட கண்டன ஆர்ப்பாட்டத்திற்குப் பின் ஏடு நிறுத்தப்பட்டு அவற்றின் ஆசிரியர் குழுவினர் சிறையிலடைக்கப்பட்டனர்.

## இன்றைய செய்தி நாளைய வரலாறு

# மே நாள்: மார்க்சின் பிறந்த நாள்

தோழர் லின் பியாவ் (Lin Piao) அவர்களின் தலைமையில் சிறப்பபாக நடந்தேறியது.

ஏப்ரல் 30ஆம் நாள் இரவு பத்து மணிக்குத் தொடங்கிய நிகழ்வு நள்ளிரவு பன்னிரெண்டு மணிக்கு இடை நிறுத்தப்பட்டு தோழர் லின் பியாவ் அவர்களால் செங்கொடி ஏற்றப்பட்டு தொடர்ந்தது. கொடியேற்றுதலின்போது அனைத்துத் தோழர்களும் இணைந்து எழுச்சிப்பாடல் பாடியது குறிப்பிடத்தக்கது. "மே" முதல் நாள் அதிகாலையில் நிகழ்வு முடிவடைந்தது.

படிப்பகம்

www.padippakam.com

# வாய்மொழித் தொகுப்பு

**Gaja Mada** பல்கலைக் கழகத்தின் முன்னால் மாணவரான **Bapak Tjipto** G 30 நாடகத்திற்குப் பின் சுகார்தோ அரசால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் பலநூறு தோழர்களோடு பேராசிரியர்களையும் இழந்தவர். அந்த அதிர்ச்சியிலிருந்து இன்னும் முழுமையாய் விடுபடாதவர். கிழக்கு சாவா இவரின் சொந்த ஊர். இக்கால் மத்திய சாவாவில் உணவகம் நடத்தி வருகின்றார். இவரோடு மூன்று நாட்கள் நள்ளிரவு கடந்தும் பேசினோம். அவற்றின் சுருக்கம்தான் கீழே தொகுக்கப்பட்டுள்ளது:

G 30 எனப்படும் செப்தம்பர் இயக்கத்தில் கட்சியின் பங்கு இருந்தது உண்மை. ஆனால் பொதுவுடைமைக்கட்சி முன்னோடிகள் கருவியேந்திய கட்சித் தோழர்களைப் பலப்படுத்தாது, இராணுவத்தையே நம்பி பெரிதும் சார்ந்திருந்தது தோல்விக்கு காரணமாகியது எனலாம். தோல்வியைப் பற்றிச் சொல்லும் போது, நமது மாவோவும் ஒருவகையில் காரணம் என்ற கசப்பான உண்மையை மறந்துவிடுவதற்கில்லை.

சீனா, இனி ஒரு போதும் சோசலிசப் பாதைக்குத் திரும்பாது. ஆனால் சோவியத்து! இன்னும் நான் நம்பிக்கை இழந்து விடவில்லை என்று, உறுதியுடன் நள்ளிரவுக்குப் பிறகும் நம்மோடு கதைத்துக் கொண்டிருந்தார்.

ஆர்ப்பாட்ட எதிர்ப்புகளில் பங்கெடுக்கும் மாணவர்கள் பெரும்பாலோர் தங்களை இடதுசாரிகள் "சே" வழியினர் என்றோ, தேசியவாதிகள் அல்லது மத அடிப்படைவாதிகள் என்றோ அடையாளப்படுத்திக் கொள்ளத் தவறுவதில்லை. புரட்சியைக் கொண்டு வரவே தங்கள் போராட்டங்கள் எனக் கூறிக்கொள்ளும் இவர்கள் படைத்துறை தேவையே இல்லை என முழக்கமிடுவதை அறிந்து இவ்விளைஞர்களின் அறியாமையைக் கண்டு அனுதாபங் கொள்ளத் தான் முடிகின்றது. இராணுவமின்றி இந்தோனேசியா போன்ற தீவுக்கூட்ட நாட்டை ஒன்றிணைப்பது வலிமை கொண்ட படையின்றி ஆள்விழுங்கி ஐக்கிய அமெரிக்கா போன்ற அரசுகளின் அழுத்தங்களை எவ்வாறு எதிர்க்கொள்வது என்பன போன்ற அடிப்படைப் புரிதல்கூட பெரும்பான்மை மாணவர்களுக்கு இல்லையே.

உலகமயமாக்கம் என்பதின் பெயரில் உலகை விழுங்கிவிட குறிப்பாய் உழைக்கும் அடித்தட்டு மக்களை மேலும் வறுமையில்

படிப்பகம்

www.padippakam.com



ஆழ்ந்த வலை பின்னும் ஏகாதிபத்திய சூழ்ச்சிகளை இவர்கள் எப்போது புரிந்துகொள்ளப் போகின்றார்கள். உணர்ச்சி வேகத்தில் செயல்படும் இவர்களின் சக்தி விரயமாகுமேயொழிய ஆக்ககரமான மாற்றங்கள் ஒன்றும் ஏற்பட்டுவிடாது என்று வருத்தத்தோடு தொடர்ந்தார், எழுபதை நெருங்கும் Bapak.

கம்யூனிசம் என்றாலே பயங்கரவாதம் என்ற கற்பித்தல் மக்களின் மூளையில் அழுத்தமாய்ப் பதிய வைக்கப்பட்டுவிட்டது. எனவே வெறுமனே முழங்குவதைத் தவிர்த்து, உள்ளடக்கத்தை, அதன் சாரத்தை மட்டும் மக்களின் வாழ்வியலோடு பிணைப்பதற்கு ஏற்ற வழிமுறைகளைக் கண்டறியுங்கள்; அவற்றைச் செயலாக்கி உலகை சிவப்பாக்குவோம் என்று வேண்டுகையாக்கினார்.

இன்றைய சூழ்நிலையைத் தங்களுக்குச் சாதகமாக்கிக்கொண்டு தன்னார்வக் குழுக்கள் (NGOs) மக்களைக் குழப்புகின்றார்கள். அவர்கள் வென்றால் வாழ்க்கைத்தரம் உத்தரவாதமற்றுப் போகும் என்றும் எச்சரித்தார்.

★

2. இடதுசாரியினராகவும், முற்போக்காளர்களாகவும், மதவாதிகளாகவும் தங்களை அடையாளப்படுத்திக் கொள்ளும் மாணவர்கள் ஒரு நேரிய புரிதலின்றி செயல்படுகின்றார்கள் என்பது மட்டும் உண்மை.

மேகாவதியின் தலைமையின் கீழ் அணி திரளும் மாணவர்கள் விளக்கமற்றவர்களாகவே உள்ளனர். புங்கார்னோ மீது கொண்ட பற்றுதலை அவரின் மகளுக்கு விசுவாசமாக்குகின்றனர். சுக்கார்னோ(Sukarno)மீது அதீத மதிப்பு வைக்கத் தெரிந்துள்ளார்களேயொழிய அவரைப் பல கோணங்களில் ஆராயத் தவறிவிடுகின்றார்கள். இதுபோன்றவற்றால் ஏற்படும் விளைவுகளால்தான் அப்துல் ரகுமான் போன்றவர்கள் அதிபர் ஆக முடிகின்றது. இன்றைய நாட்டுத் தலைவர் சிறந்த மதப்பற்றாளராகவும், பண்பாடு கொண்டவராகவும் இருக்கலாம், மறுக்கவில்லை. ஆனால் இந்தோனேசியா போன்ற ஒரு நாட்டை ஆள்வதற்கு இத்தகைய தகுதி மட்டும் போதுமென்று கருதுகின்றீர்களா?

மற்றவர்களைப் பற்றிச் சொல்வதற்கு என்ன இருக்கின்றது?

அமீன் ராய்ச் (Amien Rais) போன்றவர்களுக்கு அதிபர் ஆக வேண்டும் என்ற ஆசையில் கிஞ்சிற்றும் மக்களுக்கு நலமான வாழ்க்கையை அமைத்துத் தரவேண்டும் என்பதில் இல்லை.

படிப்பகம்

www.padippakam.com



சுருங்கக் கூறுமிடத்து இன்று இங்கே உருப்படியான ஒரு தலைமை இல்லை என்பதே சாலப் பொருத்தமானது என்கிறார் முப்பதை நெருங்கும் **Shanty** (சாந்தி).

கிழக்கு சாவாவில் மதப்பற்று கொண்ட இசுலாமியக் குடும்பத்தில் பிறந்த இவர், பொதுப் பணிக்கென நேரத்தை ஒதுக்குவதை அவரின் கால அட்டவணையின் வழி அறிந்தோம்.

இம்மங்கையின் பொது அறிவு நம்மை வியக்கவைத்தது. சோசலிசம், மார்க்சம், சுற்றுச்சூழல், பெண்ணுரிமை, ஏன் இந்த நீட்சே போன்றோரையும் உள்ளடக்கியது இவரின் பொது அறிவு. உறவினரின் புத்தகக் கடையில் உதவியாளராகப் பணி செய்கின்றார். வாடிக்கையாளர்கள் இல்லாத சமயத்தில் தொடரும் படிப்பு நம்மால் இரண்டு நாட்கள் தடைப்பட்டது. வழியனுப்பும் போது நம்மிடமிருந்து கற்றுக்கொள்ள நிறைய இருப்பதாகக் குறிப்பிட்டார். மக்கள் எனும் கடலில் மீனாய் இருக்க வேண்டுமென்ற மாவோ, தேர்வில் தேறிவிட்டோம் போலும் என்று மகிழ்ந்து இரயில் வண்டியில் ஏறினோம்.

★

## இன்றைய செய்தி நாளைய வரலாறு

பெரும்பான்மை மீனவர்களும் அவர்தம் குடும்பத்தினருமான கலந்துரையாடலில் "உலகமயமாக்கத்தினால் ஏற்படும் விளைவுகள்" கருப்பொருளாய் அமைந்தது. கடந்த 2-1-01ல் (Lombck) லொம்போக் தீவின் புகழ்பெற்ற கூத்தா கடற்கரையில் இது நடந்து முடிந்தது.

மறைந்த 15-1-01 அன்று (Merapi) மெராப்பி மலையின் அடிவாரத்தில் அமைக்கப்பட்டுள்ள சுற்றுலாப் பயணிகள் தங்குமிடத்தில் நிகழ்ந்த தோழர் தீத்தா(**Tita**)வின் பிறந்த நாள் வரவேற்பு, மார்க்சிச கலந்துரையாடலாகவே நடைபெற்றது. பலதரப்பட்ட கருத்துரைகள் பறிமாறிக் கொள்ளப்பட்டன.

மேற்கண்ட இரண்டு நிகழ்வுகளிலும் தோழர் **Bujang Lapok** சமூகமளித்திருந்தார்.

படிப்பகம்

www.padippakam.com

# உலகை உன்னுடையதாக்கு

என்னருந் தோழனே
இனிய நண்பா!
பசித்த வயிற்றோடு
பாடுபடும் பாட்டாளியே!

இரட்டைக் கட்டடமாம்
பெட்ரோனாசு கோபுரம்
உலகிலேயே உயர்ந்ததாம்

நீண்டு செல்லும் இருப்புப் பாதை
அதன் இருமருங்கிலும்
பல்லாண்டாய் வாழ்ந்து வருவோர்
வீடுகளைக் காலி
செய்யக் கட்டளை

மாவட்ட ஆட்சி அதிகாரியும்
புகையிரதத் துறை தொழிலாளரும்
கடுதாசு கடப்பாறை
அதட்டல் மிரட்டலோடு!
ஆட்சியாளரின் அம்புகள் இவர்கள்

வீடுகள் கட்டித் தரப்படும்
அதன் பின்னரே வெளியேற்றம் – என்ற
தேர்தல் கால வாக்குறுதிகள் எங்கே?

முதலமைச்சரின் உறுதிமொழி
தடித்த எழுத்துகளாய்த் தாளில்
நிறுத்த முடிந்ததா உடைப்பை!

தொடர்ச்சி பின் அட்டை—

படிப்பகம்

www.padippakam.com



—உள்அட்டை தொடர்ச்சி

வெண்பளிங்குக் கட்டடம் டாயாபூமி
எழுப்பியோரின் குடும்பங்கள்
அருகமைந்த தொடர்வண்டி நிலையத்தில்
பதாகை தாங்கி போராடுகின்றார்கள்

சட்ட நாடாளுமன்றக் காலிகளின்
உளறல்களை உறுதிமொழியாய்
இன்னும் நம்புவதா!

பாராளுமன்றம் பன்றித் தொழுவம்
உரைத்தவன் வழியில்
செங்கொடியை உயர்த்து
உலகை உன்னுடையதாக்கு.

அச்சாக்கம்: ஆல்வெல் அச்சகம், சென்னை-600 019.

படிப்பகம்